செ.வெ.எண்.56 நாள்.31.01.2018

காஞ்சிபுரம் மாவட்ட அளவிலான அனைத்து வங்கிகள் பங்கேற்ற அடல் ஓய்வூதிய திட்டம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கான நகர்மன்ற கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

****************

காஞ்சிபுரம் மாவட்ட முன்னோடி வங்கி மற்றும் மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் பங்கேற்ற அடல் ஓய்வூதிய திட்டம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கான நகர்மன்ற கூட்டம் பாபு திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சித்தலைவர்,

அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் என்பது அவர்களுக்கும், அவர்களுக்கு பிறகு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இது போன்று பொதுமக்கள் அனைவருக்கும் இந்த பயன் கிடைக்க வேண்டும் என்பதற்காக 18 முதல் 40 வயதுக்குட்பட்ட தனியார் நிறுவனங்கள், தனியார் பள்ளி, கல்லூரிகளில் வேலை பார்ப்பவர்கள் மட்டுமின்றி வரன்முறைபடுத்தப்படாத தொழில் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களுக்கும் இத்திட்டம் பயனுள்ளதாகும். இத்திட்டத்தில் மாவட்டத்தில் அனைத்து வங்கிகளிலும் 34,000 பேர் சேர்ந்துள்ளனர். குறிப்பாக இந்தியன் வங்கியில் மட்டும் 17,000 பேர் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர். வங்கியாளர்கள் பல்வேறு தொழில் புரிவோர்களிடத்தில் இத்திட்டத்தின் பயனை அறியச் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்தி இத்திட்டத்தின் பயன் அனைவரையும் சென்றடையும் வகையில் திட்டத்தினை செயல்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அடல் ஓய்வூதிய திட்டம், பிரதம மந்திரியின் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஆயுள் காப்பீட்டுத் திட்டங்களின் பயன்கள் குறித்து பொது மக்களுக்கு விரிவாக விளக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் பொது மக்கள் மற்றும் அனைத்து வங்கி வாடிக்கையாளர்களும் தங்களை இத்திட்டங்களில் இணைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பின்னர் இத்திட்டத்தில் சேர வருகைபுரிந்தவர்களின் விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று வங்கியாளர்களிடம் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு.பி.சண்முகநாதன், முன்னோடி வங்கி மேலாளர் திரு.ஹெப்சூர் ரஹ்மான் மற்றும் அனைத்து வங்கியாளர்கள் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.




காஞ்சிபுரம் மாவட்ட அளவிலான அனைத்து வங்கிகள் பங்கேற்ற அடல் ஓய்வூதிய திட்டம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கான நகர்மன்ற கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா. பொன்னையா இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இத்திட்டத்தில் சேர வருகைபுரிந்தவர்களின் விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்று வங்கியாளர்களிடம் வழங்கினார்.